**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**PUDUKKOTTAI.**
**MCOP.No. 682/2019**

**P.W.1 திவ்யா க/பெ.செல்வராஜ் நாள் – 17.11.2025**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு கூடுதல் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கூடுதல் குறுக்கு விசாரணை :–**

**எனது கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார் என்பதை காண்பிப்பதற்கு work permit, offer letter, visa ஆகியவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம .சா.ஆ.11 ஆவணம் 2011 முதல் 2016 வரை தான் நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான் . இந்த விபத்து 2016 ற்கு பின்னிட்டு மூன்று வருடம் கழித்து 2019 ல் தான் நடந்துள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.10 ஆவணத்தில் எந்த தேதி, மாதம், வருடம் முதல் எந்த ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது என்று குறிப்பிடப்படாததால் ம.சா.ஆ.10 ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல . ம.சா.ஆ.12, ம.சா.ஆ.13 ஆகிய ஆவணங்கள் கல்வி சம்மந்தமான சான்றிதழ்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ.9 ஆவணம் Completed course என்றும், அது 2009 ல் முடிந்துவிட்டது என்றும் சொன்னால் சரிதான் . பாஸ்போர்ட்டை பொறுத்தவரை 2019 ற்கு முன்னிட்டு எவ்வித குறிப்பும் காண்பிக்கப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . முறையான ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் வெளிநாட்டில் வேலை பார்த்ததாக தவறுதலாக சொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*